This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# என் இனிய இயந்திரா!

www.writersujatha.com

## 1

டிசம்பர் 31. கி.பி. 2021.

புத்தாண்டை எதிர்நோக்கி வானம் வெளிச்சத்தில் ஆரவாரித்துக் கொண்டிருந்தது. தெருக்களில் மக்கள் அனுமதிக்கப்பட்ட மகிழ்ச்சியில் உற்சாகமாக ஊடாடிக் கொண்டிருந்தார்கள்.

நிலாவுக்கு உள்ளமெல்லாம் பதறியது. காரணம், அவள் மார்பில் பத்திரப் படுத்தியிருந்த அரசாங்கக் கடிதத்திலிருந்த அனுமதி–

"நிலா–சிபி

107836–11343–இ

உங்கள் இருவருக்கும் ஆண் குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதியளிக்கப் பட்டிருக்கிறது. பெயர் மணி... இந்த அனுமதிப் பத்திரம் 2022–ம் ஆண்டு ஜூன் இருபத்தைந்து வரை செல்லும். அதற்குள் கர்ப்பம் ஏற்படவில்லையெனில் ஒரே ஒரு முறை அனுமதி நீடிக்கப்படுவதற்கு அரசின் மக்கட் தொகை கட்டுப்பாட்டுப் பிரிவில் 'Q' பகுதியில் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். கர்ப்பம் பெண் குழந்தை என்று தெரிந்தால் உடனே ம.க.பிரிவின் 'D' பகுதிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். மீறினால் குற்றம்.

ஒப்பம் ஆர். எம்.
இந்திய அரசு மக்கட் பிரிவுக்காக"

www.writersujatha.com

நிலா தன் மார்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். இன்னும் சிபிக்குத் தெரியாது.

புத்தாண்டுப் பரிசு. ஒரு குட்டி சிபியின் சலனம். கர்ப்பம் ஜூன் வரை எதற்கு? இன்றிரவே... இன்றிரவே!

வழியெல்லாம் உற்சாக மக்கள் தத்தம் ஒரே ஒரு குழந்தைகளை இழுத்துக் கொண்டு அனுமதித்த அளவுக்குச் சந்தோஷமாக இருந்தார்கள். ஜன்னல்களின் வழியாக பென்ஷன் இல்லங்களில் கிழவர்கள் பொக்கையாகச் சிரித்தார்கள். அமைதியாக இறந்துபோகக் காத்திருந்தவர்கள்.

நிலா–

பழவந்தாங்கல் கூண்டிலேயே டிக்கெட் வாங்கிக் கொள்ளும்போது இயந்திரம் 'உங்கள் எடை 52 புள்ளி 5. உயரத்துக்குச் சற்று அதிகம்' என்று 'சின்தசைசர்' குரல் தர,